முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.147/2017**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 09.02.2026 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி Selvi.S.Padmavathi,M.L., அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 09.02.2026 | சாட்சி | வா.சா.3 |
| பெயர். | ராஜநாயகம் | வயது.. | 43 |
| தந்தை பெயர். | ராமானுஜர் | கிராமம்.. | ஸ்ரீவக்காரமாரி |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 1ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை........**

1. நான் ஸ்ரீமுஷ்ணம் கொடிகால்தெருவில் வசிக்கிறேன். நான் 6ம் வகுப்பு படித்துள்ளேன். நான் கொத்தனார் வேலை செய்கிறேன் என்றால் கொத்தனார் வேலையும விவசாயமும் செய்கிறேன். இந்த வழக்கின் எண். தெரியாது. வழக்கு யார் யார் மேல் போட்டுள்ளார்கள் என்றால் வாதி சிவகாமசுந்தரி பிரதிவாதி விநாயகமூர்த்தி மீது போட்டுள்ளார். நான் எத்தனை வருடமாக மேற்சொன்ன முகவரியில் வசிக்கிறேன் என்றால் சுமார் 35 வருடங்களாக வசிக்கிறேன். வாதி சுமார் 20 வருடங்களாக மேற்சொன்ன கொடிகால்தெருவில் வசிக்கிறார். வாதி இடையில் கிரயம் வாங்கி தான் அங்கு வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி பூர்வீகம் கொடிகால்தெரு தான் என்றால் சரிதான். பிரதிவாதியின் முன்னோர்கள் அங்கு தான் வசித்தார்கள் என்றால் சரிதான். வாதி கிரயம் வாங்கியது பிரதிவாதியின் உறவினரிடமிருந்து வாங்கினார் என்றால் சரியல்ல வேறு நபரிடமிருந்து வாங்கினார்.

2. வாதி ராமகிருஷ்ணனிடமிருந்து கிரயம் வாங்கினார் தேதி வருடம் மாதம் தெரியாது. நான் வசிக்கும் வீட்டிற்கும் மரப்பட்டறைக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் நான் வசிக்கும் வீட்டில் இருந்து பட்டறை 3 வீடு தள்ளி உள்ளது. எனது வீட்டிற்கு எதிரில் பாய் வீடு உள்ளது. பட்டறை நடத்தப்படும் தெருவில் சுமார் 50 வீடுகளுக்கு மேல்இருக்கும். வாதி சிவகாமசுந்தரி எனக்கு சின்னமாமியார் என்றால் சரியல்ல தெருக்காரர் தான். வாதி கணவரின் அண்ணன் மருமகன் நான் என்று சொன்னால் சரியல்ல. நான் சித்ரா வாதி ஆகியோர் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள். எனக்கும்

பிரதிவாதிக்கும் முன்விரோதம் இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியிடம் வேலை செய்த காமராஜர் என்ற நபர் வேலை செய்தார் அவரை நான் தாக்கியதால் விருத்தாசலத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல, காமராஜர் என்ற நபரை எனக்கு தெரியாது. அந்த பிரச்சனையில் பிரதிவாதி விநாயகமூர்த்தி புகார் கொடுத்ததால் நான் தற்போது பிரதிவாதிக்கு எதிராக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. மரபட்டறை யார் முதலில் ஆரமித்தது என்றால் பிரதிவாதி தான் ஆரமித்தார். இந்த வழக்கிற்கு முன்போ பின்போ வேறு வழக்கு உள்ளதா என்றால் இது தான் முதல் வழக்கு.

3. வழக்கு விபரம் தெரியும், என்னவென்றால் வயலில் மரப்பட்டறை முதலில் வைத்தார்கள் பின்பு வயலில் பிரச்சனை ஏற்பட்டதால் மரப்பட்டறையை தெருவிற்கு கொண்டுவந்தார்கள் மரப்பட்டறை சத்தம் ஏற்படுவதால் எனது 3 மகன்களுக்கும் படிப்பதற்கு சிரமாக உள்ளது படிக்கமுடியவில்லை அவர்கள் 3ம் வகுப்பு, 11 வகுப்பு, காலேஜ் படித்து வருகிறார்கள். வழக்கில் நான் தரப்பினார்கள் என்றால் சரிதான் ஆனால் மரப்பட்டறை தெருவில் தான் வசிக்கிறேன். வழக்கின் விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் ஆரபத்திலேயே தெரியும் தேதி வருடம் நினைவில் இல்லை வழக்கு ஏற்பட்டு சுமார் 10 வருடங்கள் இருக்கும். பிரதிவாதி வயலில் பட்டறை வைத்து பிரச்சனை ஆனதற்கு ஆதாரமாக ஆவணம் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் இல்லை. நான் மேற்சொன்ன ஆதார ஆவணத்தை வழக்கில் வாதி தாக்கல் செய்துள்ளாரா என்றால் எனக்கு தெரியாது.

4. வாதி அழைத்தன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் எனக்கும் மரப்பட்டறையால் பிரச்சனை உள்ளது. நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வந்ததா என்றால் சரிதான். அந்த சம்மனை நீதிமன்றத்தில் கொடுத்திருக்கிறேனா என்றால் வழக்கறிஞரிடம் தான் கேட்கவேண்டும். ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சியாக இருந்து தற்போது தாலுக்காவாக மாறிவிட்டது என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு முன்பு நான் எதாவது காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளேனா என்றால் தெருவே சேர்ந்து புகார் அளித்துள்ளோம் அதற்கு ஆதாராமா ஆவணம் உள்ளதா என்றாலும் அது நீதிமன்றத்தில் தாக்கல் செய்ப்பட்டுள்ளதா என்றால் தெரியவில்லை. வாதி எனக்கு உறவினர் என்பதால் சட்டவிரோதமாக அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 3ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை........**

5. நான் 35 வருடமாக வழக்கு கிரமத்தில் வசிப்பதால் கிராமத்தை பற்றி நான்றாக தெரியும். இந்த வழக்கில் சொல்லப்பட்டது மரஇழைப்பகம் போல் எத்தனை உள்ளது என்றால் 8 மரஇழைப்பகம் உள்ளது. மேற்சொன்ன 8 மரஇழைப்பகமும்

மக்கள் வசிப்படத்தில் தான் இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல, வழக்கில் கூறபட்ட மரஇழைப்பகம் தான் வசிப்பிடத்தில் தொந்தரவாக உள்ளது. இதே போல் நான் மற்ற மரஇழைப்பகமும் மக்கள் வசிப்பிடங்களில் இருப்பதால் நான் ஆதாரத்தோடு காண்பித்தாலும் நான் மறுக்கிறேன். மரஇழைப்பகத்திற்கு எவ்வளவு மின் இணைப்பு சக்தி தேவைபடும் என்ற விபரம் தெரியுமா என்றால் சரியாத விபரம் தெரியாது. மரஇழைப்பகத்திற்கு தற்போது எவ்வளவு மின் இணைப்பு சக்தி தேவைபடுகிறது என்ற விபரம் தெரியாது. பொதுவாக வசிப்பிடத்தில் அருகிலேயே வீட்டு உபயோகத்திற்கு பயன்படுத்தப்படும் மிளகாய் உள்ளிட்ட தானியங்களுகான அரவை இயந்திரகள் செயல்படுகிறது என்று சொன்னால் எங்கள் பக்கத்தில் அவ்வாறு இல்லை அது வேறு மரஇழைப்பகம் வேறு.

6. ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சியில் 15 வார்டுகள் கொண்டது மற்ற வார்டுகளில் மேற்சொன்னவாறு அரவை இயந்திரகள் உள்ளதா என்றால் இல்லை, கடைவீதிக்கு சென்று தான் நாங்கள் அரைக்கிறோம். நான் மேல்கொடிகாள்தெரு என்பது ஸ்ரீமுஷ்ணத்தில் முக்கியமான வணிகஸ்தளம் என்று சொன்னால் சரியல்ல அது 10 அடி தெரு தான். 1ம் பிரதிவாதி விநாயகமூர்த்திக்கு அரசு நிறுவனத்தில் DIC (District Industrial மூலம் சிறுதொழில் செய்வதற்காக விண்ணப்பம் செய்யப்பட்டு அரசு அலுவலர்கள் முறையாக இடத்தை பார்வையிட்டு மரஇழைப்பகம் செயல்படுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டு பிரதிவாதி மரஇழைப்பகம் நடத்திவருகிறார் என்று சொன்னால் சரியல்ல. அதன் அடிப்படையில் 3 ம் பிரதிவாதி மின் வாரிய சட்டத்திற்கு உட்பட்டு மரஇழைப்பகத்திற்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் 1ம் பிரதிவாதியின் அடிகடி சென்று பிரதிபலன் கொடுக்குமாறு கேட்கிறேன் என்றாலும், இல்லை என்றால் இடையூறாக செயல் படுவேன் என்று சொன்னால் சரியல்ல.

7. வழக்கு சொத்து பற்றி விபரம் தெரியாமல் வாதியின் உறவினர் என்பதால் வாதிக்கு ஆதராவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 3 ம் பிரதிவாதி நகரின் மற்ற பகுதிகளில் அமைய பெற்ற மரஇழைப்பகத்திற்கு மின் இணைப்பு கொடுத்தது போல் தான் 1ம் பிரதிவாதிக்கும் முறையாக சட்டவிதி மீறப்படாமல் மின்இணைப்பு கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடிக்கு உகந்தது என்றால் சரியல்ல.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-.S.Padmavathi,
Principal District Munsif
Chidambaram.